
# திராவிடத்தால் வாழ்கிறோம்

922

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

23

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுப்பூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

# மஜீத் குடும்பத்துக்கு நிதியுதவி!



திராவிட முன்னேற்றக் கழகம் உருவான காலத்தில் இருந்தே, அதன் ஒவ்வொரு அசைவிலும் சிறுபான்மையினரும் இணைந்திருந்தார்கள், இணைக்கப்பட்டிருந்தார்கள். குறிப்பாக, தி.மு.கழகத்தின் முகவரி சென்னை பவழக்காரத் தெரு, எண் 7-இல் இருந்து தொடங்குகிறது. திருவொற்றியூரைச் சேர்ந்த சண்முகம் பிள்ளை என்பவருடைய வீட்டில் 17.09.1949 -அன்று கழகத்தின் அமைப்புக் கூட்டம் தொடங்கியது. அந்த வீட்டையே தலைமையகமாகப் பயன்படுத்திக்கொள்ள சண்முகம் பிள்ளை அறிவுறுத்தியும் கூட அண்ணா, கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் இருந்த டபிள்யூ.கே. தேவராச முதலியார் வீட்டில் இருந்துதான் இயங்கினார். எனினும் கட்சிக்குத் தலைமையகமாக முதன்முதலில் செயல்பட்ட ‘202, தங்க சாலைத் தெரு’ இல்லத்தில் இருந்தும் செயல்பட வசதி இல்லாமல், கட்சி அலுவலகத்தையும் ‘திராவிட நாடு’ அச்சகத்தையும் காஞ்சிபுரத்திற்கு மாற்றினார் அண்ணா.

### அறிவக விழாவில்...

அதன்பின்னர், கழகத்துக்கு என்று உருவான முதல் சொந்தக் கட்டடம் ‘அறிவகம்’. கழகத்தின் முதல் மாநில மாநாட்டுக்கு முன்பாக, 02.12.1951 அன்று தலைமையகமான ‘அறிவகம்’ திறக்கப்பட்டது. திறந்து வைத்தவர் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த வி.எம்.ஜான். கட்சியின் மூத்த நிர்வாகிகள் எத்தனையோ பேர் இருந்தும், வி.எம்.ஜானை அண்ணா தேர்வு செய்ததற்கு முக்கியக் காரணங்கள் இருந்தன. நாஞ்சில் மாவட்ட முதல் மாநாடு நடப்பதற்கு முன்பே, பல மாவட்டங்களில் மாவட்ட மாநாடு முடிந்துவிட்டது. ஆனால், அறிவகத்திற்கான நிதியை, நாஞ்சில் மாவட்ட மாநாடு முடிந்த ஒரே வாரத்திற்குள் அனுப்பிவைத்து, அண்ணாவின் அன்பைப் பெற்றார் வி.எம்.ஜான். அதன்காரணமாக அவரையே அறிவகத்தைத் திறக்கச் செய்தார் அண்ணா.

### முதல் மேடையில்

கழகம் தொடங்கப்பட்டபோது 133 பொதுக்குழு உறுப்பினர்கள் அறிவிக்கப்பட்டனர். பிரச்சாரக் குழு, அமைப்புக் குழு, சட்டதிட்டக் குழு, நிதிக்குழு என நான்கு குழுக்களும் அமைக்கப்பட்டன. மேலும், 16 செயற்குழு உறுப்பினர்களும் இருந்தனர். பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, டி.எம்.பார்த்தசாரதி ஆகியோரை உள்ளடக்கிய அந்த 16 பேரில் வி.எம்.ஜானும் ஒருவர். பொதுக்குழு உறுப்பினர்களில் எம்.எஸ்.மொய்தீன், ஹாஜாபீர் ஆகியோர் இருந்தனர். அதேபோல், ராபின்சன் பூங்காவில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் பொதுக்கூட்டம் கொட்டும் மழையில் நடைபெற்றபோதும் மேடையில், எம்.எஸ். மொய்தீன் இருந்தார் என்பதும் வரலாறு.

### குன்றத்தூர் துப்பாக்கிச்சூடு!

திராவிட இயக்க இதழ்களும், நூல்களும் மக்கள் மத்தியில் வீச்சாகப் பரவிக் கொண்டிருந்ததை, சகித்துக்கொள்ள இயலாத ஆட்சியாளர்கள், அடக்குமுறையை ஏவிவிட்டனர். பிரிவு-153 ஏ-வின் கீழ், பெரியாரின் பொன்மொழிகள், அண்ணாவின் ‘ஆரிய மாயை’ உள்ளிட்ட 12 நூல்கள் தடை செய்யப்பட்டன. பெரியாரும், அண்ணாவும் கைது செய்யப்பட்டு, திருச்சி சிறையில், பக்கத்து பக்கத்து அறையில் வைக்கப்பட்டனர். திராவிடர் கழகத்தில் இருந்து பிரிந்து, தி.மு.கழகத்தை அண்ணா தொடங்கி, அப்போது ஓராண்டாகி இருந்தது. பிரிவுக்குப் பிறகு இருவரும் நெருக்கமாக இருந்த முதல் சந்திப்பு அது. ஆனால், ஒருவருக்கு ஒருவர் பேசிக்கொள்ளாமல் இருந்த அந்தத் தவிப்பை, ‘திராவிட நாடு’ இதழில் மிக அழகாக விவரித்திருப்பார் அண்ணா.

தலைவர்கள் உள்ளே இப்படித் தவிக்கிறார்கள் என்று கருதியோ என்னவோ, தொண்டர்கள் வெளியே வீரியமிக்க பல போராட்டங்களை முன்னெடுத்தனர்.

> ரூ. 2,472 மதிப்புள்ள நிலத்தை விலைக்கு வாங்கி மஜீத் குடும்பத்திற்கு 06.06.1953 அன்று அளித்தது கழகம்.

அப்படி, 28.09.1950-இல் குன்றத்தூரில் ஒரு கூட்டத்தை நடத்த கழகம் முடிவு செய்தது. ஆனால், காவல்துறை அனுமதிக்கவில்லை. பேச்சுரிமைக்கு அனுமதி மறுப்பதா என ராமநாதபுரத்தில் நடைபெற்ற, முதல் மாவட்ட மாநாட்டில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டம் நடத்தும் நாளென அறிவிக்கப்பட்ட 26.10.1950 அன்று 144 தடை விதிக்கப்பட்டாலும், அதையும் மீறி, குன்றத்தூரில் கழகத்தினர் கூடத் தொடங்கினர். அந்தக் கூட்டத்தில் பேசுவதாக அறிவிக்கப்பட்டவர்கள் 5 பேர். என்.வி.நடராசன், பாலசுந்தரம், தணிகாசலம், கணபதி ஆகியோருடன் பேசுவதாக இருந்த மற்றொருவர் இப்ராஹிம். கழகத்தினரைக் கட்டுப்படுத்த முடியாமல் காவல்துறை துப்பாக்கிச்சூடு நடத்தியது. கழகம் சந்தித்த முதல் துப்பாக்கிச்சூடு சம்பவத்தில், இப்ராஹிம் பெயரை எழுதி வைத்திருக்கிறது வரலாறு.

30.12.1949-இல் நடைபெற்ற முதல் பொதுக்குழு குறித்த பதிவுகள் எங்கும் இல்லை என்றாலும், விரிவாகத் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட பொதுக்குழு என்றால், அது 11.03.1951-இல் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற பொதுக்குழுதான். அந்தப் பொதுக்குழுவில் சிறுபான்மையினரான வி.எம்.ஜான், ஹாஜாபீர் கலந்துகொண்டனர். அதேபோல அதே ஆண்டு டிசம்பர் 13, 14, 15, 16 ஆகிய தேதிகளில் எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் நடைபெற்ற முதல் மாநில மாநாட்டின் தீர்மானக் குழுவிலும் வி.எம்.ஜான் இடம் பெற்றார். தொண்டர் படைத் தலைவர்களில் வி.எம்.மார்க் என்பவர் இருந்தார். அந்த கால கட்டத்திலேயே தி.மு.க. மேடைகளில் தவறாமல் ஒலித்தது, நாகூர் ஹனீபாவின் இசை முழக்கம்.

### இயக்கத்தின் முதல் பலி!

முதல் மாநில மாநாட்டுக்கு முன்பாக, மதுரையில் பொதுக்குழுவைக் கூட்டியது கழகம். அந்தப் பொதுக்குழுவிலேயே 1952-ஆம் ஆண்டு நடைபெறவிருந்த சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல் குறித்து விவாதிக்கப்பட்டது. திராவிட நாடு கோரிக்கையை, ஆதரிக்கும் வேட்பாளர்களை ஆதரிப்பது என அப்போதே தீர்மானிக்கப்பட்டது. இதை முதல் மாநில மாநாட்டிலும் தெளிவுபடுத்தினார் அண்ணா. அதன்படி தி.மு.க. ஆதரித்த சட்டமன்ற வேட்பாளர்கள் 43 பேர் வெற்றி பெற்றனர். ஒட்டுமொத்தமாக எதிர்க்கட்சிகள் 94 இடங்களில் வென்றன. ஆளும் காங்கிரஸ் 96 இடங்களில் மட்டுமே வெல்ல முடிந்தது. அதேபோல நாடாளுமன்றத்திற்கும் கழகம் ஆதரித்த 8 பேர் வெற்றிபெற்று சென்றனர்.

கழகத்தின் வீரியத்தையும் வளர்ச்சியையும் இம்முடிவுகள் நன்கு உணர்த்தின. அதை அன்றைய காங்கிரஸ் உறுப்பினர்கள் நன்கு உணர்ந்தனர். குறிப்பாக, காங்கிரஸ் வேட்பாளரை எதிர்த்து உழவர் உழைப்பாளி கட்சிக்குத் தேர்தல் வேலை பார்த்ததற்காக, நெல்லிக்குப்பம் கிளைக் கழகத்தைச் சேர்ந்த மஜீத் படுகொலை செய்யப்பட்டார். தி.மு. கழகம் சந்தித்த முதல் களப்பலி இதுதான். கழகம் தொடங்கப்பட்ட மூன்றே ஆண்டுகளில் ஏற்பட்ட இந்த இழப்பு ஈடு செய்ய முடியாதது என, ஒட்டுமொத்தமாக கழகத்தினர் மஜீத் குடும்பத்துக்கு உடன் நின்றனர். அவருடைய பெற்றோர் ஷேக்பாவும், தாவூத் பீபியும் வயதானவர்கள். தங்கைகள் ஜின்தா, தம்பி கரீம் சிறுவர்கள். அந்தக் குடும்பத்திற்கு உதவியளிக்க நிதி திரட்டப்பட்டது. ரூ. 2,472 மதிப்புள்ள நிலத்தை விலைக்கு வாங்கி மஜீத் குடும்பத்திற்கு 06.06.1953 அன்று அளித்தது கழகம்.

...நீளும்

## கோபி- சுதாகருக்குக் குவியும் பாராட்டுகள்!



தமிழ்நாட்டில் மிகப் பிரபலமான பொழுதுபோக்கு யூ டியூப் சேனல்களில் ஒன்று ‘பரிதாபங்கள்’. எதார்த்தமான பேச்சுக்களால் மக்கள் மனதைக் கவர்ந்த கோபி-சுதாகர், அவர்களது குழுவினர் இணைந்து வெளியிடும் காணொலிகளுக்கு எப்போதும் பெரும் வரவேற்பு இருக்கும். பல லட்சக்கணக்கான பார்வைகளை எளிதாகப் பெற்றுவிடும். அந்த வகையில், பொழுதுபோக்கு என்ற அளவில் மட்டும் அல்லாமல், சமீபத்தில் ‘சொசைட்டி பாவங்கள் (Society Paavangal)’ என்ற தலைப்பில், மிகுந்த சமூகப் பொறுப்பு உணர்வுடன் காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

சமீபத்தில் பேசுபொருளாகியிருக்கும் ஆணவப் படுகொலை குறித்து, அந்தக் காணொலி, பொதுச் சமூகத்துடன் மிகச்சிறப்பான உரையாடலை முன்வைத்திருக்கிறது. சாதிவெறி எப்படித் தூண்டிவிடப்படுகிறது என்று விளக்குவதுடன், அதற்கு இரையாகாமல் கல்வி- வேலைவாய்ப்பை நோக்கி, நாம் முன்னேற வேண்டிய அவசியத்தையும் அந்தக் காணொலி வலியுறுத்துகிறது. ஒரே நாளில் 20 லட்சத்திற்கும் அதிகமானோர் அந்தக் காணொலியைப் பார்த்திருக்கிறார்கள்.

‘சாதியவாதிகள் வெட்கித் தலைகுனியும் அளவுக்குச் செறிவான உள்ளடக்கத்தைக் கொண்டு, அவர்களுக்கே உரித்தான எளிமையான பாணியில் காணொலி வெளியிடப்பட்டிருக்கிறது’ என பாராட்டுகள் குவிந்து வருகின்றன. ஆயிரக்கணக்கானோர் தங்களது சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்து, ‘பரிதாபங்கள்’ யூ டியூப் சேனல் குழுவினரைப் பாராட்டி வருகிறார்கள். சாதி ஆணவத்திற்கு எதிரான பரப்புரையை யார் செய்தாலும் பாராட்டுக்குரியவர்கள்தான். அதிலும் வெகுமக்களைச் சென்றடையக் கூடிய வாய்ப்புள்ளோர் செய்யும்போது, அதன் பலனும் அதிகரிக்கிறது. அந்த வகையில், கோபி- சுதாகரின் துணிச்சலான இந்த முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கது.

## ஃப்ளாஷ்பேக்



ச.கலைவாணன்




### ஆரூர் கல்லூரியில் தலைவருடன் மாணவராக...

1981-ஆம் ஆண்டு, திருவாரூர் அரசு கலைக் கல்லூரி ஆண்டு விழாவுக்குச் சிறப்பு விருந்தினராக வருகை தந்தார் மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் கலைஞர். அப்போது, கழகத்தின் மாணவர் தி.மு.க. சார்பில், கல்லூரித் தேர்தலில் அனைத்துத் துறைகளிலும் வெற்றிபெற்றிருந்தோம். கல்லூரி தமிழ்ப் பேரவையின் செயலாளராக இருந்த நான், கல்லூரி மாணவர் தி.மு.க.வினருடன் சென்று, அரசு பயணியர் மாளிகையில் தங்கியிருந்த தலைவரைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றோம். 1986-ஆம் ஆண்டு, நன்னிலம் ஒன்றியத்தில் இளைஞர் அணியில் பணியாற்றியபோது, கழகம் நடத்திய ஈழ விடுதலை ஆதரவுப் போராட்டத்தில் பங்குபெற்று, கைதாகி திருச்சி மத்திய சிறைச்சாலையில் 38 நாட்கள் இருந்தேன்.

**- ச.கலைவாணன் பி.ஏ. இலக்கிய அணி அமைப்பாளர், வில்லிவாக்கம் பகுதி, சென்னை கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கல்லக்குடி வழக்கு!

கருவூலம்

கல்லக்குடி வழக்கில், அன்பில் தர்மலிங்கம், கவிஞர் கண்ணதாசன், தம்புசாமி உள்பட 25 பேருக்காக வழக்கறிஞர்கள் கயிலை அனந்தர், முசிறி தங்கவேலு, ஜி.சுப்பையா, பெருமாள் ஆகியோர் வாதாடினர். வழக்கு ஆறு மாதங்களுக்கு மேல் நடைபெற்ற நிலையில், அன்பில் தர்மலிங்கம், தம்புசாமி, கழுகுமலை இரத்தினம், சந்தானம், ஜோசப் ஆகியோருக்கு ஓராண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர், உயர்நீதி மன்ற மேல்முறையீட்டில் தண்டனைக் காலம் குறைக்கப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131